சுருக்கம்

சட்டக்கல்வி – 2017ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெறவுள்ள சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில் கலந்து கொள்ளும் தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளியில் பயின்று வரும் 4 மாணவர்களுக்கு, தலா ரூ.75,000/– வீதம் ரூ.3,00,000/- செலவினம் ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

சட்ட (சக)த்துறை

அரசாணை (நிலை) எண்.209

நாள் 03.05.2017.
ஹேவிளம்பி ஆண்டு – சித்திரை– 20.
திருவள்ளுவர் ஆண்டு 2048.

படிக்கப்பட்டது:

பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி அவர்களின் கடித எண்.119/பதிவாளர்/தநாதேசப/2016, நாள் 18.11.2016 மற்றும் 03.04.2017.

* * * * *

ஆணை:

மேலே படிக்கப்பட்ட 18.11.2016–ஆம் நாளிட்ட கடிதத்தில், பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி அவர்கள், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளியில் பயின்று வரும் ஏழு மாணவர்கள் நடப்பாண்டில் மார்ச் – ஏப்ரல் மாதங்களில், ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெறவுள்ள சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில் கலந்து கொள்ள அச்சட்டப்பள்ளியில் தெரிவு செய்யப்பட்டுள்ளபடியால், அப்போட்டியில் அவர்கள் கலந்து கொள்ள ஆகும் செலவினத்தை மேற்கொள்ள ஏதுவாக, 7 மாணவர்களுக்கும் மொத்தம் ரூ.8,80,000/– நிதியுதவி வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி அவர்களின் கோரிக்கையினை கவனமுடன் பரிசீலித்த அரசு, தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளியின் சார்பில் 2017–ஆம் ஆண்டில் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில், ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெறவுள்ள சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் கலந்து கொள்ள ஏதுவாக, ஒரு போட்டிக்கு இரு மாணவர்கள் வீதம், கீழ்க்கண்ட 4 மாணவர்களுக்கும் தலா ரூ.75,000/– (ரூபாய் எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்), அவர்கள் 2017–ஆம் ஆண்டு மார்ச் – ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற உள்ள சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டியில் கலந்துகொள்ளும் வகைக்காக, அதாவது, போக்குவரத்து, உணவு மற்றும் இருப்பிடம் போன்றவைகள் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ஏதுவாக நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுகிறது:–

| வ. எண். | மாணவர்களின் பெயர் | வகுப்பு மற்றும் ஆண்டு | சர்வதேச மாதிரி நீதிமன்ற போட்டி நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1. | ஆகாஷ் குப்தா | பி.ஏ.,எல்.எல்.பி(சீர்மிகு), நான்காம் ஆண்டு | வியன்னா |
| 2. | கரோலின் சூசன் ஜான்சன் | பி.ஏ.,எல்.எல்.பி(சீர்மிகு), நான்காம் ஆண்டு | |
| 3. | ராகுல் எம். சங்கர் | பி.ஏ.,எல்.எல்.பி(சீர்மிகு), நான்காம் ஆண்டு | ஹாங்காங் |
| 4. | தருண் டோனாடி | பி.ஏ.,எல்.எல்.பி(சீர்மிகு), நான்காம் | |

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2202-பொதுக்கல்வி – 03. பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 102. பல்கலைக்கழகங்களுக்கு நிதி உதவி – மாநிலச் செலவினங்கள் – BO. தேசிய சட்டப்பள்ளி, திருச்சி – 09. உதவித்தொகை – 01. நடப்புச் செலவுக்கான உதவித்தொகை (த.தொ.கு. 2202-03-102-BO-0915)".

4. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதி ஒதுக்கம் 2017–2018 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி நிதி ஒதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி, மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்குவதற்கு சட்டக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்படி தொகையினை 2017–2018–ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கக் கருத்துருவுடன் சேர்த்து அரசு நிதி(உள்–II)த் துறைக்கு உரிய நேரத்தில் தவறாமல் சமர்ப்பிக்கும்படி சட்டக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேற்சொன்ன உரிய தொகையினை பெற்று வழங்கியபின், போட்டிக்குச் சென்று வந்த மாணவர்களின் செலவுச் சீட்டு பட்டியை (Bills) பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளியிடமிருந்து பெற்று சரிசெய்யுமாறு சட்டக்கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. போட்டியில் கலந்து கொண்ட பின், மேற்சொன்ன நான்கு மாணவர்களிடமிருந்தும் அப்போட்டியின் உபயோகம் குறித்தான அறிக்கையினை பெற்று அரசுக்கு அனுப்பிவைக்குமாறு பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.20047/உள்–II/2017, நாள் 25.04.2017–இல் பெறப்பட்ட அதன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.334 (முன்னூற்று முப்பத்து நான்கு) ஆகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.ச.பூவலிங்கம்,
அரசு செயலாளர்(பொ)

பெறுநர்:

1. சட்டக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.
2. பதிவாளர், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி, திருச்சி – 620 009.
3. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – 600 035.

நகல்:

1. நிதி (உள்.II/வ.செ.பொ.II) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
2. மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம், நிதி மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
3. மாண்புமிகு அமைச்சர் (சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
4. மாநில கணக்காய்வாளர், சென்னை – 600 018/600 035.
5. இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இருப்பு கோப்பு/ உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/5/17.